## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் – ஆடுதுறை

## அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (27.08.2022 முதல் 31.08.2022)

அறிக்கை எண்: 68/2022 தேதி: 26.08.2022

### அரியலூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33 °செ முதல் 36 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 25 °செ முதல் 26 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### அரியலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (27.08.2022 முதல் 31.08.2022)

| கடந்த வார வானிலை (23.08.2022 முதல் 25.08.2022) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (27.08.2022 முதல் 31.08.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 23/08 | நாள்-2 24/08 | நாள்-3 25/08 | தேதி | நாள்-1 27/08 | நாள்-2 28/08 | நாள்-3 29/08 | நாள்-4 30/08 | நாள்-5 31/08 |
| 7.7 | 41.9 | 0 | மழை (மி.மீ.) | 12 | 19 | 45 | 14 | 4 |
| 36 | 36 | 33 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 35 | 34 | 33 | 33 | 33 |
| 25 | 25 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 25 | 24 | 23 | 23 | 23 |
| 6 | 8 | 7 | மேகமூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 72-43 | 84-58 | 69-69 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-40 | 70-40 | 70-40 | 80-60 | 80-50 |
| 24 | 16 | 14 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 12 | 6 | 6 | 6 | 8 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு | வட வட கிழக்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | வட கிழக்கு | மேற்கு |

### அரியலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 27.08.2022 முதல் 31.08.2022 ஆகிய தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33 °செ முதல் 35 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23 °செ முதல் 25 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6-12 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | வரும் நாட்களில் மிதமானது முதல் கன மழை பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும் |
| | | பயிர்களுக்கு உரம் இடுவது மற்றும் பூச்சி மருந்து தெளிப்பதை தவிர்க்கவும் |
| நெல் | நாற்றாங்கால் | தற்போது சம்பா நடவுவிற்க்கு தயாராக இருக்கும் நாற்றாங்காலுக்கு முறையான வடிகால் வசதி அமைத்து நாற்றுக்களின் சேதத்தை தவிர்க்கவும். |
| வாழை | | வாழை சாகுபடி செய்யும் விவசாயிகள் வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| கால்நடைகள் | மாடு மற்றும் ஆடு | எதிர்பார்க்கப்படும் மழையால் கன்றுகள் மற்றும் ஆட்டுகுட்டிகளுக்கு சளி போன்ற உபாதைகள் ஏற்பட்டு நுரையீரல் அழற்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மழை சாரல் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். |

## குறுஞ்செய்தி

நெல் நாற்றாங்காலுக்கு முறையான வடிகால் வசதி அமைத்து நாற்றுக்களின் சேதத்தை தவிர்க்கவும்.

**இயக்குநர்**